# பேச்சிப்பாறை அரசுப் பள்ளி நூலகத்துக்கு கல்வியியல் கல்லூரி சார்பில் 300 புத்தகங்கள்



பள்ளித் தலைமையாசிரியரிடம் புத்தகங்களை வழங்கிய வட்டாரக் கல்வி அலுவலர் திருமலைக்குமார்.

**குலசேகரம், ஏப். 5:** பேச்சிப்பாறை அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி நூலகத்துக்கு ஆற்றூர் என்.வி.கே.எஸ்.டி. கல்வியியல் கல்லூரி சார்பில் அன்பளிப்பாக 300 புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு, பள்ளித் தலைமையாசிரியர் சஜிதா தலைமை வகித்தார். வட்டாரக் கல்வி அலுவலர் திருமலைக்குமார், மாவட்ட முன்னாள் கல்வி அலுவலர் ராமச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று புத்தகங்களை வழங்கிப் பேசினர்.

கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர் டி.எஸ். பிரசோப் மாதவன், தேர்வுத் துறைப் பேராசிரியர் தேவிகா, உடற்கல்வி இயக்குநர் கண்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். தமிழாசிரியர் வசந்தி, ஆசிரியர் தேன்மொழி, கல்லூரி மாணவர்-மாணவியர் பங்கேற்றனர்.

பள்ளி நூலகப் பொறுப்பாசிரியர் நிஷாகுமாரி வரவேற்றார். பள்ளி ஆசிரியர் நாகப்பன் நன்றி கூறினார்.